அப்போஸ்தலனாகிய பவுல் பிலேமோனுக்கு எழுதின நிருபம்

இளம் ஊழியனுக்கு...

பிலேமோனுக்கு எழுதின நிருபத்தின பின்னணி

- பிலேமோன் கொலோசே சபையை சார்ந்தவர் (1,2 ஒப்பிடுக கொலோ 4:17). இவர் மற்றவர்களை வரவேற்று விருத்தோம்பல் செய்வதிலும் சிறந்தவர் (1,2,5,7)
- அப்பியாள் அவருடைய மனைவியாகவும் அர்க்கிப்பு அவருடைய மகனாகவும் இருக்கலாம் என்று கருதப்படுகிறது (2)
- ஒநேசிமு, பிலேமோனின் அடிமைகளில் ஒருவனாயிருந்து அவரைவிட்டு ஓடிப்போனவன் (15,16)
- ஒநேசிமு ஒருவாறாக ரோமாபுரியை அடைந்து அங்கே பவுலை சந்தித்து கிறிஸ்தவராக மாறினார் (10)
- பவுலுக்கு மிகவும் பிரியமானவராகவும், மிகலும் பிரயோஜனமுள்ளவராகவும் மாறியிருந்தார் (11-13)
- ஒநேசிமுவை ரோமாபுரியில் வைத்திருப்பது சரியல்ல என்பதையுணர்ந்த பவுல் அவரை மீண்டும் பிலேமோனிடம் அனுப்ப நினைத்தார் (12-14)
- பிலேமோன் ஒநேசிமுவை கிறிஸ்துவுக்குள் சகோதரனாக எற்றுக்கொள்ளவும், ஒநேசிமு தவறுகள் ஏதும் செய்திருந்தால் அதை மன்னிக்கும்படி கோரிக்கை விடுத்தும் இந்த நிருபம் எழுதப்பட்டது (15-21)
- இந்த நிருபத்தை பவுல் எழுதியதற்கு முதன்மைக் காரணமும், இரண்டாம்நிலைக் காரணமும் இருந்தது.

  1) முதன்மை காரணம்: ஒநேசிமுவுக்கு மன்னிப்பை பெற்றுக்கொடுக்க

  2) இரண்டாம்நிலைக் காரணம்: ஒநெசிமு சிறையிலிருந்து விடுதலைபெற்றபின் அவன் தங்குவதற்கான இடத்தை ஆயத்தப்படுத்த
- அதிகாரம் 1
- வசனங்கள் 25

பிலேமோனுக்கு எழுதின நிருபத்தின் முக்கிய பகுதிகள்

- இந்த நிருபத்தின் மதிப்பு: இது சுருக்கமான நிருபமாயிருந்தாலும் இதன் மதிப்பு பின்வருமாறு கூறப்படுகிறது.
  - இது கிறிஸ்தவ உபசரிப்புக்கான மாதிரி
  - இது கிறிஸ்தவ அன்பிற்கான வெளிப்பாடு
  - இது கிறிஸ்தவ மாற்றத்திற்கான நினைவுச்சின்னம்

திறவுகோல் பகுதி: 10-11

என்னவென்றால், கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன். முன்னே அவன் உமக்குப் பிரயோஜனமில்லாதவன், இப்பொழுதோ உமக்கும் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்.

நிருபத்தின் சுருக்கம்

- பவுலின் உபசரிப்பு (1-3)
- பவுலின் வாழ்த்து (4-7)
- பவுலின் ஆலோசனை (8-21)
- பவுலின் முடிவுரை (22-25)